# தங்கம்

'ஆர்' கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு

பதிப்பாசிரியர்
க. தமிழ்வேலு
செங்குட்டுவன்

'ஆர்' அனைத்திந்திய ஆராய்ச்சிக் கழகம்
கரூர்

# தங்கம்

'ஆர்' கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு

பதிப்பாசிரியர்
கு. செங்குட்டுவன்
முனைவர் சு. தமிழ்வேலு

வெளியீடு
செயலகம்
ஆர் அனைத்திந்திய ஆராய்ச்சிக் கழகம்
தமிழ்க்கோட்டம்
முனிரத்தினம் தெரு, அய்யாவு குடியிருப்பு, அமைந்தகரை
சென்னை – 29

* தங்கம்
* ஆர் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு
* ISBN No. 978-81-922802-6-4
* பதிப்பாசிரியர்
  க. செங்குட்டுவன்
  முனைவர் சு. தமிழ்வேலு
* முதற்பதிப்பு : 2013, திசம்பர்.
* பக்கங்கள் : xvi + 384 = 400
* உரிமை
  © ஆர் அனைத்திந்திய ஆராய்ச்சிக் கழகம்
  தமிழ்க் கோட்டம்
  2, முனிரத்தினம் தெரு
  அய்யாவு குடியிருப்பு
  அமைந்தகரை, சென்னை - 600 029
  ✆ : (044) 2374 4568
* விலை : ரூ. 350/-

அச்சிட்டோர் : சபாநாயகம் பிரிண்டர்ஸ், 176, கீழ வீதி, சிதம்பரம் - 608 001.
தொலைபேசி : (04144) 223020, 223040
39, மில்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைபேசி : (044) 26401531, 26401807
email : sabanayagamprinters@gmail.com

# 56 நோய்நிலைக்கான பண்பாட்டு அர்த்தங்கள்

*நோய்களுக்கான காரணிகளை மருத்துவ மானுடவியல் நோக்கில் ஆராய்கின்றது.*

மனித இனத்தின் அனைத்து இயங்கியற் கூறுகளைப் பற்றியும் அதன் பரிமாணங்களைப் பற்றியும் அலசி ஆராய்ந்து முடிவுகளைப் பெறுகின்ற அறிவுத்தேடலின் வெளிப்பாட்டை மானுடவியல் எனலாம். இன்றைய உலகில் மானுடவியல் சார்ந்த அறிவியல் பிரயோகம் வேறுபட்ட துறைகளில் முதன்மை பெற்றுவருகின்றது. மருத்துவ மானுடவியல் என்பது மானுடவியல் அணுகுமுறைக்கும் மருத்துவத் திற்கும் இடையிலான தொடர்பின் வழிபட்டது. இது மானுட வியலின் முதன்மையான பிரயோகத்தளங்களில் ஒன்றாகும். குறிப்பாகச் சமகால உலகின் பல்பண்பாட்டுச் சூழலமைவில் சமூகத்தளங் களிடையே காணப்படும் நோய்கள், அவற்றுக்கான சிகிச்சை முறைகள், நோய்க்கான காரணிகள் என்பவற்றைத் தனக்கே உரிய துறைசார் அறிவினூடாக விளக்குகின்றது.

மருத்துவ மானுடவியல் என்பது, மருத்துவ வரலாற்றியல், மருத்துவ நியமங்கள், மருத்துவ, சமூக மற்றும் மனிதப் பொது ஆரோக்கிய பிரச்சனைகளை மனிதனுடைய உயிரியல் மற்றும் பண்பாட்டு அடிப்படையில் விளங்கிக்கொள்ளும் ஒரு சமூக விஞ்ஞான அலகாகும் (Hasunt and Prasal - 1959). அந்தவகையில் இக்கட்டுரையானது நோய்நிலைக்கான பண்பாட்டு அர்த்தங்களை மருத்துவ மானுடவியல் நோக்கில் விவரிப்பதாக அமைகிறது.

கைத்தொழில்புரட்சியினைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் உடல் என்பது வெறும் கலன், தசைத் தொகுதிகளால் இணைக்கப் பட்ட ஓர் இயந்திரமாக நோக்கும் தன்மை மாற்றமடைந்து, அது சமூக உளத்துடன் இணைந்த ஒன்றாக நோக்கப்படும் அணுகு முறை வளர்ச்சியடைந்துள்ளது. நோய் தொடர்பான மக்கள் கருத்து நிலை வெளிப்பாடுகள், நோய்க்கான சிகிச்சை முறைசார்ந்த நம்பிக்கைகள் போன்றவற்றினை உடல், உள, சமூக பண்பாட்டு

**சண்முகராஜா சிறிகாந்தன்**
*முனைவர்பட்ட ஆய்வாளர்*
*புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி - 8.*

அணுகுமுறையோடும் ஆராய்ந்து விளங்கிக்கொள்ளும் வகையில் மருத்துவ மானிடவியல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

மானுடவியலாளரான கார்லடன் என்பவர் பண்பாட்டுக் கூறுகளுக்கும், உயிரியற் கூறுகளுக்கும் உள்ள உறவைத் தெளிவாகப் புரிந்துகொள்வதன் மூலம் மனித நோயியல் பற்றி அறியமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார். இவருடைய கருத்திலிருந்து நோயியல் பற்றி விளங்கிக்கொள்வதில் பண்பாட்டின் முக்கியத்துவத்தினை அறியமுடிகின்றது. ஆனால், மானுடவியல் உயிரியல் ரீதியான விளக்கங்களை ஒருபோதும் நிராகரிப்பதில்லை அதே நேரம் மக்களுடைய பண்பாட்டு நடைமுறைகளின் வழியே புரிந்து கொள்வதினை வலியுறுத்துகின்றன. அந்தவகையில் மானிடவியலாளர் (Willin 1977) நோய் என்பது கட்டாயம் உயிரியல் மருத்துவ விலகலாக மட்டும் இருக்க வேண்டும் என்று இல்லை. அது உண்மையில் சமூக, உள உயிரியற் பண்பாட்டினால் வடிவமைக்கப் பட்ட ஒன்றாகவும் இருக்கமுடியும் என்கின்றார். இங்கு நோய்க்கான அங்கீகாரம் என்பது பாதிக்கப்பட்ட நோயாளரையும் மற்றும் அவர் சார்ந்து வாழும் சமூகவயப்பட்டதாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பண்பாட்டுக் குழுமங்களும் தமது கடந்தகால அனுபவத்துடன் தமது நோய் பற்றிய கருத்துநிலை வரையறையைத் தத்தமது பண்பாட்டு நம்பிக்கைகள், நியமங்கள் மற்றும் விழுமியங்கள் போன்றவற்றினால் கட்டமைத்துக் கொள்கின்றன. நோய் தொடர்பான அனுபவம் என்பது தனிமனித அனுபவத்தின்வழி பெறப்பட்ட ஒன்றாகவோ, புறவயம்சார்ந்த தன்மையில் இருந்து உருப்பெறும் ஒன்றாகவோ இல்லாது சமூகம் சார்ந்த பொது அனுபவத்தின் வழியே பெறப்படும் ஒன்றாக அமைகின்றது. நோய்க்கான விளக்கம் கொடுத்தல், பெயர் கொடுத்தல், அதுபற்றி மற்றவர்களுக்கு வெளிப் படுத்தல் என்பனவெல்லாம் பண்பாட்டுப் பண்புகளின் வழியேதான் இடம்பெறுகின்றன. ஆரம்பகால யூத கிறிஸ்தவர்கள் தங்களின் பாவச் செயல்களுக்கெல்லாம் தண்டனையாக நோயினைப் பெறுகின்றான் எனும் நம்பிக்கையும் சில நாடுகளில் இன்றும் நோய் என்பது உடல்நலக் குறைவினால் மட்டும் வருவதல்ல. அவரவர் செய்யும் நன்மை தீமைகளுக்கேற்ப நோய் ஏற்படுவதாகக் கருதப்படுகின்றமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

உலகின் வேறுபட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பண்பாட்டிடை ஆய்வுகள் (cross cultural studies) ஒருவனுடைய நோய் நிலையும் ஆரோக்கிய நிலையும் பண்பாட்டுக் கட்டமைப்பில் தான் தங்கியுள்ளன என வலியுறுத்துகின்றன (Martin 1992). இவற்றினடிப்

படையில் ப்பொஸ்ரெர் மற்றும் அன்டெர்சன் (Foster and Anderson 1978) ஆகிய இருவரும் நோயியல் கோட்பாட்டு முறையை (Disease Theory system) அறிமுகப்படுத்தினார்கள். இதில் மூன்று அடிப்படைக் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. ஆளுமைசார்ந்த நோயியற் கோட்பாடு
   Personalistic disease Theory
2. இயற்கை சார்ந்த நோயியிற் கோட்பாடு
   Naturalistic disease Theory
3. மனஎழுச்சி சார்ந்த நோயியற் கோட்பாடு
   Emotionalistic disease Theory

என்பனவாகும்.

சமூகத்திற் காணப்படும் அதிகளவான மனநோய்கள் என்பது, எமது மூதாதையர்களின் கோபத்தால் இடம்பெறுகின்றன என்றும், பேய்கள், சூனியங்களே காரணமெனவும் கூறுவதே ஆளுமை சார்ந்த கோட்பாடாகும். இயற்கைசார்ந்த கோட்பாடு என்பது, நோய் உடலிலுள்ள சில நுண்ணங்கிகளினூடாக ஏற்படுகின்ற பாதிப்புகளே என்று கூறுகின்றது. அதேநேரம் மக்களுடைய நோய்களுக்கு அவர் களது மனங்களே காரணம் எனக் கூறுவது மனஎழுச்சி சார்ந்த கோட்பாடாகும். அதாவது எமது உணர்வு நிலைகளே நோய்களுக்குக் காரணம் எனக்கூறுவதாகும். உதாரணம் இலத்தின் அமெரிக்காவில் பெண்கள் அதிகம் பயப்படும்போது "Susto" என்ற நோய்களுக்கு உட்படுகின்றார்கள் எனக் கூறப்படுகின்றது.

எனவே, நோய்க்கான காரணிகள் உயிரியல் விலகலாக மட்டும் இல்லாது, பண்பாட்டு விலகலாகவும், மற்றும் பண்பாட்டுக் காரணி களின் செல்வாக்கால் இடம்பெறும் ஒன்றாகவும் உள்ளமையினை நாம் மேற்குறிப்பட்ட கோட்பாட்டின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும். அந்தவகையில் கார்லடன் நீயுகினி மேட்டுநில மக்களிடம் குரு (Kuru) என்ற ஒரு வகை நரம்பியல் நோய் பெருமளவு காணப் பட்டது. இதற்கு அம்மக்கள் சடங்குப் படையலிற் படைக்கப்படும் சமைக்காத மூளையை உண்பதுவே நோய் ஏற்படுவதற்கான காரணமென அறியப்பட்டுள்ளது. இவ்வாறாகவே நைஜீரியாவில் பெடோயின் (Bedouin) மக்கள் மத்தியிற் கருத்தரிக்கும் பெண்களிடம் சத்துக்குறைவு நோய் அதிகம் காணப்பட்டது. இதற்குக் காரணம் கருத்தரிக்கும் பெண்களிற் சூரிய ஒளிபடக்கூடாது எனும் பண்பாட்டு நம்பிக்கை அங்கு நிலவிவருவதேயாகும். இந் நம்பிக்கையினால் கர்ப்பகாலங்களில் பெண்கள் கறுப்புக் கூடாரங்களில் இருப்பதால் விட்டமின் ஏ.டி (A.D) கனிமச் சத்துக்கள் கர்ப்பம் தரிக்கும் பெண்

களிடையே குறைவாகக் காணப்படுவதால் மேற்படி நோய் ஏற்படுகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. இன்றும் பல பண்பாட்டுப் புலங்களில் செய்வினை, சூனியம் என்பவற்றால் வேறுபட்ட நோய்கள் ஏற்படுகின்றன எனும் நம்பிக்கை நிலவுகின்றமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய மக்கள் பண்பாட்டினை ஆராயும் போது ஒவ்வொரு சமுதாயத்திலும் மனிதனுக்கு ஏற்படும் நோயியற் கூறுகள், உயிரியல் முறையிலும் பண்பாட்டு முறையிலும் அணுகப்படுவது உறுதியாகிறது. இதற்கேற்ப நோய்க்கான சிகிச்சையும் உயிரியல் ரீதியான மருத்துவத்தின் மூலமும் பண்பாட்டின் ரீதியான மருத்துவத்தின் மூலமும் வழங்கப்படுகின்றது (பக்தவத்சல பாரதி - 2005). இவ்விரு நேர் எதிரான முறைகளில் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை மக்கள் மத்தியில் பண்பாட்டு வழியான மருத்துவமுறைக்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உண்டு.

அந்த வகையில் இன்றும் சமூகத்தவர்கள் மத்தியில் ஏற்படுகின்ற நோய் நிலைமைகளினைத் தீர்ப்பதற்கு, நோய்நீக்க வழிமுறைகளைத் தமது பண்பாட்டுக் கருத்துநிலைகளின் அடிப்படையிற் கட்டியமைத்துக் கொள்கின்றன. எதிர் அமைப்பியல் கோட்பாட்டாளர் விக்டர் ரேனர் (Victor Turner) நோய்நிலை பற்றிக் குறிப்பிடும் போது, நோய்நிலை என்பது பண்பாட்டு அமைப்புக்கு எதிரமைப்பாக உள்ள ஒரு விடயம் என்பார். இதனால், நோய்குணமாக்கல் என்பதும் இவ் எதிரமைப்பியல் ரீதியிலேயே இடம்பெறுகின்றன. அந்தவகையில் ஒவ்வொரு மனிதனிலும் உடல்சார் உணர்வு, மனம்சார் உணர்வு என இரு வகையான உணர்வுத்தளங்கள் காணப்படுகின்றன. இத் தளங்களிடையே ஏற்படும் இணைவு இன்மை ஒரு மனிதனைப் இயல்புப் பண்பாட்டு அமைப்புக்கு எதிரமைப்பாகத் தொழிற்படத் தூண்டும்போது (நாளாந்த இயல்பு நிலையிலிருந்து மாறுதல்) அவரை நோயாளராகச் சமூகம் இனங்கண்டு கொள்கின்றது. நோய்நிலைக்குட்பட்டவரை இயல்புக்குக் கொண்டுவரும் ஒரு வழிமுறையாகவே சடங்குகள் காணப்படுகின்றன.

சடங்குகள் நோயாளின் உணர்வுநிலையிற் சமநிலைத் தன்மையை ஏற்படுத்துகின்றன. நோயாளி சடங்கு எனும் எதிரமைப்புக்கு உட்பட்டு, பின்னர் அமைப்புக்கு மாற்றம் பெறுவார். குறிப்பாக மருத்தீடு, செய்வினை, பில்லி, சூனியங்கள் போன்றவற்றால் நோய் ஏற்பட்டதாக அடையாளப்படும் நோயாளியைச் சமூக, பண்பாட்டு எதிரமைப்புத் தளங்களாக உள்ள சுடலை, அல்லது சமூக விளிம்புப் பகுதிகளிற் சமூக, பண்பாட்டு எதிரமைப்பாளர்களான

மந்திரவாதி, பூசாரி என்போரால் சடங்குகளுக்குட்படுத்தப்படும் போது, குறிப்பிட்ட நோயாளிக்கு, புத்தம்புதிய அனுபவங்கள் கிடைக்கும். இவை நோயாளியை மேற்குறிப்பட்ட உணர்வுச் சிக்கலில் இருந்து மீட்டுச் சமூக, பண்பாட்டு அமைப்புக்கேற்றவராகக் (நோய் அற்றவராக) கொண்டு வருகிறது.

தொகுத்து நோக்கும்போது, மருத்துவமானுடவியலானது நோய்நிலை என்பதனைப் பண்பாட்டினால் கட்டமைக்கப் படுகின்றதொன்றாக வெளிப்படுத்துகின்றது.

**உசாத்துணைகள்**

Kottako, Corrad Phililip. 1997. *Anthropology*, The Exploration of Human Diversity. The Graw - Gill Companies

பக்தவத்சல பாரதி, என். சண்முகலிங்கன் (பதிப்பு). 2005. இலங்கை இந்திய மானிடவியல், சிதம்பரம், மெய்யப்பன் பதிப்பகம்.